முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1133

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

05.11.2022, சனிக்கிழமை

1. வள்ளலே வாழுகின்ற ஞானியே
வையகம் காக்க வந்த தவசியே
எல்லா உலகிலும் அரங்கன் உன்
எல்லையில்லா தர்மசக்தியை நிரப்பி
2. நிரப்பியே இந்த லோகத்தை தர்மலோகமாக்கி
நிலவுலகில் ஞான ஆட்சி புரிய
ஆட்சிப்புரிய என் ஆற்றலாக வந்து
அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
3. தட்டாது தொடர்ந்து ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 19 ம் நாள் 05.11.2022 சனிக்கிழமை)
தவராஜன் உன் சக்தி பெருக எடுத்துரைப்பேன்
உரைக்கவே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
உயர்வான அரங்கன் சன்மார்க்கமே சிறந்த மார்க்கம்
4. மார்க்கமதை உலகோர் ஏற்றுவிட்டால்
மரணத்தை வெல்லுவது இலகுவாகும்
பார்த்துரைப்பேன் அரங்கனே மெய்ஞானகுரு என்று
பழுதில்லா உள் சிந்தை கொண்டுவிட்டால்
5. கொண்டுவிட அவர்களுக்கு ஞானியாகும்
குவலயத்தில் பெரும் வாய்ப்பு உறுதி உறுதி
உறுதிகொண்டு உயர் தீட்சை மகா மந்திர
உபதேசம் அரங்கன் வழி பெற்றுவிட்டால்
6. அபயமென அரங்கனின் திருவடிக்குள்
அறத்தினோடு இணைந்து கலந்துவிட்டால்
வரமென ஆறுமுகன் என் சிந்தை
வரமென ஆறுமுகன் என் தயவு
7. திறம்பட கலியுகத்தில் முழுமையாகி
தேசிகனால் அவர்களெல்லாம் ஞானியாவர்
ஆவதற்கு அரங்கனுள் யானிருந்து அற்புதம் நடத்துகின்றேன் கலியுகத்தில்
அவனியிலே உலகோர் அன்னதனால் அணுகிவந்தால் அரங்கனால் சித்தி உண்டு

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–